# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
# SECOND YEAR EXAMINATIONS IN COMMERCE (EXTERNAL) – 2006 / 2007
# Held in May 2007

## COM 21 – ADVANCED FINANCIAL ACCOUNTING

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. 01.04.2000 ல் A லிமிட்டெட், B லமிட்டெட்டிலிருந்து ஐந்து லொறிகளை வாடகைக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்தது. விநியோகத்தின் போது ரூபா 50,000 செலுத்தப்பட்டது. மீகுதித் தொகை ஐந்து வருடாந்த தவணைகளில் ரூபா 75,000 வீதம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 யில் செலுத்த வேண்டும்.
A லிமிட்டெட் 10% பெறுமானத்தேய்வை மேற்கொள்கிறது.

இவ் நடவடிக்கைகளை இரண்டு கம்பனிகளினதும் பேரேடுகளில் எவ்வாறு பதியப்படவேண்டும் என்பதைக் காட்டுக.

(15 புள்ளிகள்)

02. 31.03.2006 ல் உள்ளவாறான பின்வரும் பரீட்சை மீதிகளானது லங்கா லிமிட்டெடுடைய தலைமையலுவலகத்தினதும், கிளையினதும் பேரேடுகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். லங்கா லிமிட்டெடின் தலைமையலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. கிளையானது அதனுடைய வியாபாரத்தை கண்டியில் நடத்துகின்றது.

| | தலைமையலுவலகம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு(ரூபா) | செலவு(ரூபா) | வரவு(ரூபா) | செலவு(ரூபா) |
| நிலையான சொத்து | - | | 742,000 | |
| இலாபநட்டக கணக்கு | | 258,000 | | |
| நடைமுறைக்கணக்கு | 605,000 | | | 515,000 |
| 01.04.2006ல் இருப்பு கிரயத்தில் அல்லது இலாபம் கூட்டப்பட்டது (cost or markup) | 485,000 | | 154,000 | |
| கொள்வனவுகள் | 2,550,000 | | 1485,000 | |
| செலவுகள் | 469,000 | | 131,000 | |
| தேறாதஇலாபத்திற்கான ஒதுக்கம் | | 14,000 | | |
| கிளைக்கு அனுப்பிய பொருட்கள் | 1540,000 | | | |
| விற்பனைகள் | | 2297,000 | | 1997,000 |
| | 4,109,000 | 4,109,000 | 2,512,000 | 2,512,000 |

**மேலதிக தகவல்கள் பின்வருமாறு**

அ) கிளையால் விற்கப்பட்ட பொருட்கள் எல்லாம் தலைமை அலுவலகத்தால் கிரயத்துடன் 10% கூட்டி விநியோகிக்கப்பட்டவையாகும். 31 மார்ச் 2006 ல், ரூபா 55,000 பெறுமதியான பொருட்கள் கிளைக்குரிய வழியில் காணப்பட்டது.

ஆ) 31 மார்ச் 2006 ல் கிளை ரூபா 30,000 வை தலைமை அலுவலகத்தின் சார்பில் வங்கியில் வைப்பிலிட்டது. இவ் நடவடிக்கை தலைமை அலுவலகத்தின் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

இ) 31 மார்ச் 2006 ல் வழியில் உள்ள பொருட்கள் தவிர்ந்த இருப்புக்கள் பின்வருமாறு காணப்பட்டது.
தலைமையலுவலகம் - கிரயத்தில் ரூபா 545,000
கிளையில் - இலாபம் கூட்டப்பட்டது (Mark up) ரூபா 176,000

ஈ) தலைமையலுவலகம் செலவில் ரூபா 500 வை கிளைக்குச் சாட்டியுள்ளது. 31 மார்ச் 2006 ல் இதற்கான பட்டியல் (Invoice) கிளைக்குச் சேரவில்லை.

**வேண்டப்படுவது;**

31 மார்ச் 2006ல் உள்ளவாறான வியாபார இலாபநட்டக் கணக்கையும் ஐந்தொகையையும் தலைமையலுவலகத்திற்கும், கிளைக்கும், ஒன்றிணைத்தும் தயாரிக்குக.

(புள்ளிகள் 30)

03. 1 ஏப்ரல் 2006 ல் X லிமிட்டெடையும் Y லிமிட்டெடையும் ஒன்றிணைத்து XY லிமிட்டெட் உருவாக்கப்பட்டது. 31 மார்ச் 2006 ல் உள்ளபடியான இவ்விரு கம்பனிகளினதும் சுருக்கிய ஐந்தொகைகள் வருமாறு.

| | X லிமிட்டெட் | Y லிமிட்டெட் |
|---|---|---|
| **சொத்துக்கள்** | ரூபா | ரூபா |
| சுதந்திரச் சொத்து | 155,000 | 105,000 |
| பொறியும் இயந்திரமும் | 80,000 | - |
| மோட்டார் வாகனம் | 20,000 | 45,000 |
| வியாபாரக் கையிருப்பு | 50,000 | 30,000 |
| சில்லறைக் கடன்பட்டோர் | 60,000 | 40,000 |
| கையிலுள்ள காசு | 20,000 | 16,000 |
| ஆரம்பச் செலவுகள் | 5,000 | - |
| பங்குக் கழிவுக் கணக்கு | | 4,000 |
| | 390,000 | 240,000 |
| **பொறுப்புக்கள்** | | |
| 6% முன்னுரிமைப் பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூபா 10) | 100,000 | - |
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் ரூபா 10) | 200,000 | 150,000 |
| மூலதன மீட்பு ஒதுக்க நிதி | 20,000 | - |
| பொது ஒதுக்கம் | 30,000 | 30,000 |
| இலாப நட்டக் கணக்கு | 10,000 | 40,000 |
| கடன்கொடுத்தோர் | 25,000 | 14,000 |
| அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் | 5,000 | 6,000 |
| | 390,000 | 240,000 |

**இரு கம்பனிகளும் பின்வருவனவற்றுக்கு இணங்கிக்கொண்டது:**

1. XY லிமிட்டெட் X லிமிட்டெடினதும் Y லிமிட்டெடினதும் எல்லாச் சொத்துக்களை யும், பொறுப்புக்களையும் பொறுப்பேற்பதுக்கு இணங்கிக் கொண்டது. இந்நோக்கத்துக்காக பின்வரும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. மீதிச் சொத்துக்கள் அவைகளுடைய புத்தகப்பெறுமதியில் எடுக்கப்பட்டது.

| | X லிமிடெட். | Y லிமிடெட் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சுதந்திரச் சொத்து | 185,000 | 135,000 |
| மோட்டார் வாகனம் | 40,000 | 50,000 |

இரு கம்பனிகளும் சில்லறைக் கடன்பட்டோரில் 10% ஐ அறவிடமுடியாக் கடனுக்கு ஏற்பாடு செய்தல்.

2. கொள்வனவுக் கைமாறு XY லிமிட்டெடினால் பின்வருமாறு தீர்க்கப்பட்டது.

| | X லிமிட்டெட். (பங்குகளின் எண்ணிக்கை) | Y லிமிட்டெட் (பங்குகளின் எண்ணிக்கை) |
|---|---|---|
| ரூபா 10 ஆன சாதாரண பங்குகள் ஒவ்வொனறும் ரூபா 12 விலையில் விநியோகிக்கின்றது. | 25,000 | 20,000 |
| ரூபா 10 ஆன 8% முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் சம விலையில் விநியோகிக்கின்றது | 11,000 | 6,000 |
| ஒவ்வொன்றும ரூபா 100 ஆன 6% தொகுதிக் கடன்கள் ரூபா90 விலையில் விநியோகிக்கின்றது | 1,000 | - |
| காசு (கலைப்புச் செலவுகளுக்காக) | ரூபா 4000 | ரூபா 3000 |

3. X லிமிட்டெட் அதனுடைய முன்னுரிமைப் பங்குதாரருடைய பொறுப்பிலிருந்து XY லிமிட்டெட்டின் 8% முன்னுரிமைப் பங்குகளை சமவிலையில் மாற்றிக் கொடுப்பதன் மூலம் விடுதலை பெற்றது.

4. வினியோகிக்கப்பட்ட மூலதனத்தை ரூபா 700,000 க பராமரிப்பதற்காக XY லிமிட்டெட் அதேநாளில் தேவைப்பட்ட சாதாரண பங்குகளை பொதுமக்களுக்கு ரூபா 12 விலையில் விநியோகித்து காசினைப் பெற்றுக்கொண்டது.

**நீர் பின்வருவனவற்றைத் தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.**

அ) X லிமிட்டெட்டினதும் Y லிமிட்டெட்டினதும் தேறியபணக் கணக்கு.
ஆ) X லிமிட்டெட்டினது பங்குதாரர் கணக்கும், காசுக் கணக்கும்.
இ) XY லிமிட்டெட்டின் ஆரம்ப நாட்குறிப்பு.
ஈ) மேற்கூறிய நடவடிக்கைகள் முடிவடைந்த பின் உள்ள XY லிமிட்டெட்டின் ஆரம்ப ஐந்தொகை.

(25 புள்ளிகள்)

04. ஜீலை 1, 2005 ல் " H "லிமிட்டெட் " S" லிமிட்டெட்டில் 15,000 பங்குகளை ரூபா 155,000 க்கு கொள்வனவு செய்தது. 31.03.2006 ல் உள்ளபடியான இண்டு கம்பனிகளினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு காணப்படுகின்றது.

**31 மார்ச் 2006 உள்ளபடியான ஐந்தொகை**

| | H லிமிட்டெட் | | S லிமிட்டெட் | |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்:** | | | | |
| இயந்திரம் | 700,000 | | | 150,000 |
| தளபாடமும் பொருத்தும் | 100,000 | | | 70,000 |
| முதலீடுகள் | 155,000 | | | - |
| | | 955,000 | | 220,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | |
| சரக்கிருப்பு | 100,000 | | 50,000 | |
| கடன்பட்டோர் | 60,000 | | 35,000 | |
| பெறவேண்டிய உண்டியல் | 25,000 | | 20,000 | |
| வங்கியிலுள்ள காசு | 90,000 | | 40,000 | |
| | 275,000 | | 145,000 | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்த வேண்டிய உண்டியல் | 40,000 | | 20,000 | |
| கடன்கொடுதோர் | 50,000 | | 30,000 | |
| | 90,000 | | 50,000 | |
| தேறிய தொழிற்படு மூலதனம் | | 185,000 | | 95,000 |
| | | 1,140,000 | | 315,000 |

மூலதனமும் ஒதுக்கமும்:

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | 900,000 | 250,000 |
| பொதுஒதுக்கம் | 160,000 | 40,000 |
| இலாப/நட்டக கணக்கு | 80,000 | 25,000 |
| | 1,140,000 | 315,000 |

**மேலதிக தகவல்கள்:**

i. "S" லிமிட்டெட்டின் ஐந்தொகையில் காணப்படுகின்ற பொது ஒதுக்கம் 31 மார்ச் 2005 லிருந்து மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

ii. "S" லிமிட்டெட்டினால் 31 மார்ச் 2006 ல் முடிவுற்ற வருடத்தில் உழைத்த இலாபம் ரூபா 20,000 ஆகும்

iii. 1 பெப்ரவரி 2006 ல் "H" லிமிட்டெட் ரூபா 8,000 கிரயத்தையுடைய பொருட்களை ரூபா10,000 க்கு "S" லிமிட்டெட்டிற்கு விற்பனை செய்தது. 31 மார்ச் 2006ல், இவற்றில் 25% மானவை விற்கப்படாமல் "S" லிமிட்டெட்டில் காணப்படுகின்றது. அத்துடன் இப்பொருட்களின பெயரில் "H" லிமிட்டெட்டிற்கு கொடுக்கவேண்டிய ரூபா 4000 "S" லிமிட்டெட்டின் கடன்கொடுத்தோர் கணக்கு உள்ளடக்கியுள்ளது.

iv. "S" லிமிட்டெட்டின் பெறவேண்டிய உண்டியல்களில், ரூபா 15,000 "H" லிமிட்டெடின் பெயரில் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இவற்றில், "H" லிமிட்டெட் அதனுடைய கடன்கொடுத்தோர் பெயரில் பெறக்கூடிய ரூபா 8,000 பெறுமதியான உண்டியல்களை 31. 03.2006ல் endorse பண்ணியுள்ளது

நீர் 31.03.2006 ல் உள்ள படியான ஒன்றிணைந்த ஐந்தொகையை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றீர்.

(30 புள்ளிகள்)

***